Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

9

# திருக்குற்றாலக் குறவஞ்சி

ம. ஷன்மதி & முனைவர் வெ.பாலா
ஸ்ரீ சத்குரு சங்கீத வித்யாலயம் இசைக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையம்,
மதுரை – 2.

**ஆய்வுச் சுருக்கம்:**
தமிழ்நாட்டில் தஞ்சை கலைகளின் பிறப்பிடம் அனைவரும் அறிந்ததே!

சோழ வழ நாட்டில் பார்போற்றும் வண்ணம் தலை சிறந்த நடனக் கலைஞர்களும் நட்டுவனார்களும் வாழ்ந்தனர் சோழ மன்னர்களும், பல்லவமன்னர்களும் நடனக்கலையை வளர்த்ததில் முக்கியப் பங்கு வகிப்பர்.

பூஜை வழிபாடு போன்றவைகளில் நடனம். திருவிழாக் காலங்களில் நடனம், மன்னர்கள் அரசு அவையில் நடனம் என பல்வேறு நிகழ்வுகளில் நடனம் முக்கியபங்கு வகுத்திருக்கின்றன. நட்டுவனார் பரம்பரையில் மரபு வழிவந்த நடனக் கலைஞர்கள் நடனக்கலையை வளர்த்தும் போற்றி பாதுகாத்தும் வந்துள்ளனர்.
புக்தியுடன் பண்பாடு கலாச்சாரம் இதிகாச இலக்கியங்கள் என இவைகளை நடனத்தின் மூலம் எடுத்துக் கூறுவதால் நடனம் ஒரு முக்கிய அங்கம் வகிக்கின்றன.

**கலைச்சொற்கள் :** நாட்டிய நாடகம் , குறவஞ்சி , திருகுற்றாலக்குறவஞ்சி , திருகூடநாதர்பவணி

**முன்னுரை:**

காலமும் இனிக்கும் குடந்தது நம் தமிழ் மொழிகல் தோன்றி மண்தோன்றாம் காலத்து முன்தோன்றிய மூத்த மொழியான நம் மொழியில் இலக்கிய, இலக்கணச் சுவை மிளிர 96 வகை சிற்றிலக்கியங்கள் தோன்றியுள்ளன.

அவர்கள் 18 சங்கங்களைக் கொண்டுள்ள கலம்பகம் ஒன்றாகும் இதனுள் பிற மகனும் பகுதி உள்ளதென்றும் அதன் பரிணாம வளர்ச்சியை குறவஞ்சியென்றும் பெரியவர்கள் வகுத்துள்ளனர்.

**குறம் மற்றும் குறவஞ்சி:**

தொல்காப்பியத்துள் முக்காலமும் உணர்ந்து குறி கூறுவது குறத்திப்பாட்டு என்றும் இது 10 பாடல்களாக இருக்கும் எனவும், இதனுடன் சில பகுதிகளை இனைத்து குறம் எனும் பகுதி உருவாகியதென்றும், மேலும் பல அழகு நடையுடைய புதிய பகுதிகள் பற்பல சேர்க்கப்பட்டு உருவானதே குறவஞ்சி. ஆனதென்றும் சான்றோர்.

**பெயர் காரணம்:-**

1. குறவஞ்சி
2. திருக்குற்றாலக் குறவஞ்சி

**குறவஞ்சி:-**

குறவஞ்சி என்னும் சொல்லிற்கு குறப்பெண் என்று பொருள் குறத்தியான் இயல்பு. அவலுடைய மண், நாடு, இறைவன் போன்றோர் பற்றிய செய்திகன, குறி கூறல், குறவனின் வேட்டைத்திறன் என குறமக்களின் வாழ்க்கையுடன் அதிகத் தொடர்புடையது. இஃது இப்பெயர் பெறுகிறது. மலைவாணர் தோன்றிய பெண்களின் திறனை முழுவதும் அரிவதாலே தமிழ் இலக்கண முறைப்படி அன்மொழி

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

தொகையாக இந்நூலிற்குப் பெயரமைத்துள்ளது குறத்தியை குறித்து அவள் நிலை - அவள் வாழும்.

பெண்களின் தொழில்களான - கூடை முடிதல் கயிறு திரித்தல், உறி. கொட்டாள் செய்தல் குறி கூறுதல் முதலியனவாம். இவ்வாறு குறவர்களின் வாழ்க்கையையும், மொழி.

பழக்கவழக்கங்களையும் உள்ளடக்கி இருப்பதை குறவஞ்சி என்ற பெயருக்குக் காரணம்._1

**திருக்குற்றாலக் குறவஞ்சி:-**

இத்திரு குற்றாலக் குறவஞ்சியால் திருக்குற்றாலம் குற்றாலநாதர் என்று சிறப்பு பெரும் திரிகூடநாதரின் தலைவனாகக் கொண்டுள்ளமையால் இந்நாடகம், குற்றால குறவஞ்சி எனவும் மேலும் இங்கு இடம் பெறும் குறபெண் குற்றாலத்தை தமது ஊராக கொண்டுள்ளதாலும் குற்றால குறவஞ்சி என பெயர் பெற்றது.

**நூலாசிரியர்:-**

திரிகூடராசப்பகவிராயர்.

ஊர் :- திருநெல்வேலி மாவட்டம் தென்காசியில் உள்ள மேலகரம்.

காலம் :- __________

குலம் :- 'சைவ வேளான் குலம்'

**பெற்றோர் பெயர்:-**

திருவாவடுதுறை ஆதின மடத்தில் தலைவராக இருந்த மறைத்திரு சுப்பிரமணிய சுவாமிகளின் மரபு வழியிணர். இளம் வயதியிலே செய்யுள் இயற்றும் நிறனும் மடக்கு, திரி, சிலேடை முதலிய சொல் அணிகளனும் உவமை முதலிய பொருள் அணிகளும் சிறப்பாக பாடுவதில் வள்ளவர். அதனோடு விரைந்து பாடும் ஆற்றல் பெற்றவர் மிகுந்த பக்திமான்.

திருக்குற்றாலத்தில் எழுந்தருளிய திரிகூடநாதர் மீது மிக்க பக்தி பூண்டு அவர் மீது 14 நூல்கள் இயற்றியுள்ளார். ஆவை திருகுற்றால தலபுராாணம், திருகுற்றால சிலேடை வெண்பா, திருகுற்றால உலா திருகுற்றால பரம் பொருள் மாலை, திருகுற்றால குழல்வாய் மொழி மாலை திருகுற்றால வெண்பா அந்தாதி, திருகுற்றால நன்நகர் வெண்பா, திருக்குற்றால மாலை. "திருக்குற்றால யமஹா அந்தாதி", "திருக்குற்றால ஊடல்", "திருக்குற்றால கோல",

"திருக்குற்றால கோமல மாலை", "திருக்குற்றால பிள்ளைத்தமிழ்", "திருக்குற்றால குறவஞ்சி",

இவரது காலத்தில் தென்தமிழகத்தை ஆண்ட முத்து விஜய நாயக சொக்கநாத நாயக்கர். இவரது அனைத்து நூல்களின் சிறப்பினை உணர்ந்து இவருக்கு திருக்குற்றால நாதர் கோவில் வித்வான் என்ற சிறப்பு பட்ட பெயர் சூட்டி பாராட்டினார். இந்நூலின் நினைவு குறிய குறவஞ்சி மேடுளன்னும் பெயர் கொடுத்த சிறந்து தன்மையான நன்மை இவரை கௌரவித்தவர். இற்ரளவும் இவர் பரம்பரையாளர் இடம் இந்நிலம் உள்ளது.

மேலும் இவரை ஆதரித்து வந்த குறுநில மன்னர். சின்ன நஞ்சா தேவருமும் ஒருவர். இந்த மன்னரை பற்றி இவரது நூலில் ஏற்ற இடங்களில் போற்றி புகழ்ந்துள்ளார்._2

**திருகுற்றாலாகுறவஞ்சி கதை சுருக்கம்:-**

இக்குறவஞ்சி நூலில் தோற்ற பொலிவு மிக்க கொன்றை மலர் மாலை அணிந்த திருகுற்றாலாநாதார் உலாவந்தார். பிள்ளையார் பெருமான், முருகாபெருமான முதலிய தேவர்கள் பக்தே எழுந்தருளி வருகின்றனர். அவர் வருங்கால பேரிகை முழக்கம், பல்வகை கொட்டுகளின் முழக்கம், விணை முதலிய முழக்கனின் நாதம், ஒருபுறம் அடியார்கள் பாடும் பல்லாண்டு முழக்கம். ஒருபால் தேவாரா

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

திருமுறை முழக்கம். நான்முறைகளின் பெரு முழக்கமும் முழங்க. திருசின்னல்கள் "ஐவர் நாயகன் வந்தனன்" "பல அமரர் நாயகன் வந்தனன்" "தெய்வநாயகன் வந்தனன்" என்று கூறி கொண்டு வர உலா வருகின்றார்.

இம்முழக்கங்களை கேட்ட எழுவகை பருவ பெண்களும் இவ்வுலாகாண ஓடி வந்தனர். அவர்கள் இறைவளின் திருக்கோலம் கொண்டு காதலால் ஊந்தப்பட்டு மயங்கி பலவாறாக புகழ்ந்து கொண்டே உலாவை தொடர்ந்து வரலாயானர்.

அப்போது வசந்த வள்ளி என்னும் பேர்ரழகு பெண் அங்கு வந்தாள். அங்கு பந்தடித்து விளையாடும் அவள் இறைவனது அழகை கண்டு இந்த சித்தர் யார் என்று மயய்குசிநாள் தன் தோழியிடம் விளைவுகிறாள். அவர்கள் இறைவனை பற்றி கூற வசந்த வள்ளி திருக்குற்றாலநாதர் மீது பெரும் காதல் கொள்கிறார்.

அவள் காதலால் உணர்விழந்து பலவாரு உலருகிறாள் பின் மூச்சை அடைந்துவிட்ட பின் அவளது தோழிமார் அவளை மாளிகைகக்கு துக்கி சென்று சேர்த்து அவள் காதல் நோயை மாற்றுகின்றனர். மாலை பொழுது வந்தது மேலும் மயக்கம் கொண்டாள் மாலை நகர்ந்து இரவு வந்தது நிங்கள் செல்வன் வந்து தன் கதிர்களை பொருகளாகாது வருந்தி நிலாவை பழக்கிறாள் மன்மதனை பழிக்கிறாள்.

அவள் தன் தோழி அவளின் நிலையை விணவுகிறான். அவள் தான் உலா கண்டநிலையை கூறுகின்றான். தோழி வசந்த வள்ளி நிலைக்கு பழித்து பேசுகின்றாள். வசந்தவள்ளி மறுத்து திருக்குற்றாலநாதர் பெருமையை பேசுகிறார் பின்னர் vasanthavalli தோழியை இறைவனிடம் சென்று கொன்றை மாலை வாங்கி வருமாறு அனுப்புகிறாள். இதற்கிடையால் கூடல் இழைத்து தன்னை திருகுற்றால நாதர் ஏற்றுக்கொள்வார் என்று பார்கிறாள்.

அப்போது குறி சொல்கின்ற குறத்தி வருகிறாள் அவளை கண்டு மகிழ்ந்து உன்சொந்தமலை எது என்று விணவுகிறாள் அவள் தான் வாழுகின்ற குற்றாலமலையான் சிறப்பை கூறுகின்றாள் பின்னர் அவள் நாட்டின் நகரின் வளம் பற்றி கூறு என்கிறான். அலளம் கூறுகின்றாள். அதோடே கூட குற்றாலத்தின் பெருமை, திரிகூட நாதர் சிறப்பு. தேவர்கள், திருமால், பிரமமன், பிள்ளையார் பெருமான், முருக பெருமான் முதலியவர்கள் திரிகூடநாதருக்கு இணையர்கள் உள்ளோர் என வியப்புடன் பகிர்கின்றாள்.

அப்பால் வசந்தவள்ளி கூறியவன் தன்னை வினவ குறித்து முன் குறி கூறியவர்கள் எங்கள் குலத்தில் தோன்றியவர்களே என கூறி தான் குறி சொல்லுவதில் சிறந்தவள் என எடுத்து இயம்புகிறாள் பின்னர் வசந்த வள்ளி கூறிகேட்டு குறத்தி தெய்வங்களை எல்லாம் வழிபட்டு குறி கூறுகின்றாள். அப்போது அவள் vasanthavalli யிடம் பணி ஆபரணம் பூண்ட பார்திபன் வந்தாள் "அவன் சேனை கண்ட வெறுச்சி போர் கானு என்றான்" உடனே vasanthavalli தீ குறியை குழப்பி போட்டாய் நன்றாக பார்த்து சொல் என்று கூற குறத்தி vasanthavalli திருகூடநாதர் மீது காதல் கொண்டதை உள்ளவாரே கூறுகின்றாள், திருகூடநாதர் என்றதும் vasanthavalli நாணி முகத்தை கீழ்நோக்கி கவிழ்த்து கொண்டாள். நீ நானத்தை விடு நாள் நாளை உன் நாணத்தை பார்க்க தான் போகிறேன் என்று கேலியோடு கூறுகின்றாள் குறத்தி. உடனே vasanthavalli மகிழ்ந்து குறுதிக்குபற்பல அணி வகைகளை வழங்குகின்றாள்.

அங்கு அப்படியாக இங்கே குறத்தியாகிய கிங்கியை தேடி அவள் கணவன்னாகிய குறவன் வருகின்றான். அவன் பெயர் சிக்கன. அவன் தன் சிறப்பையெல்லாம் பேசிக்கொண்டு வருகின்றான் குல வழக்கப்படி குருவி வேட்டையாடுவதற்கு தேவையான கணிகளையெல்லாம் எடுத்துக்கொண்டு வருகின்றான். அப்பால் குலுவன் என்பனும் வருகின்றான் எல்லாரும் ஒன்று சேர்ந்து பறவைகள் பிடிகின்றனா.

சிக்கன், சிக்கியை தேடுவதிலேயே கருத்தாக இருக்கின்றான். தூவன் இதை தெரிந்துக் கொண்டு கேளி செய்கிறான். தூவனை சிக்கன் போன இடத்தை தெரிந்துக் கொண்டு வரும்படி வேண்டுகிறோம் அவன்

குற்றாலா நகரில் ஒரு தெருவை காட்டி அங்கே செல்ல சொல்கிறான். சிக்கன் அவ்வழியை வந்து சிக்கியை கண்டு மகிழ்ந்துரையாடுகிறான்.

சிங்கி அளவற்ற அணிகலங்கள் அணிந்திருப்பதை கண்டு முன், பின் அவ்வணிவகைகளை காணாத குறவன் ஆதலால் ஒவ்வொரு அனியும் தான் என்ன இஃது என்று வினவா அவள் இன்ன இன்ன நாட்டில் இன்ன இன்னாரிடம் தான் குறி சொல்லியதற்காக லெற்ற அவிகளாகிய பரிசுகள் என்று விடை கூறுகின்றன. பின்பு இருவரும் கூடி கலித்து இன்புறுகின்றனர்.
இதன் பின்பு இறைவனார் திருக்குற்றாலநாதரின் சிறப்புகளை எல்லாம் விளக்கிக்கூறி வாழ்தோடு இந்நூலை முடிகின்றார் ஆசிரியர்._3

**மொழி வண்மை:-**

இந்நூல் இனிய சிந்த அமைப்புகளோடு எளிய சொற்களால் இயன்ற அரிய நூல் இதில் வரும் கண்கிகள் முதலியன கருத்தை உருக்கும் எதுகை, மோனை, நயங்களோடு நூன்னிய பொருட் சேரிவும் கொண்டிருகின்றது. கற்பனை, உயர்வு நவீரசி, தர்குறிப்பேற்றம் இவற்றை திறம்பட ஆசிரியர் அமைத்துள்ளார். இதில் சொற்பின் வரும் நிலை அணி, முறன் தொடை, எதுகை இயைபு தொடை, போன்று பலபல சொல் அணிகலம், நடைஅணிகலம், நிறப்மபெற்று தமிழ் மொழிக்கொரு முக்கிய படைபாக தம்மை காட்டிக்கொள்கிறது.

**செய்யுள்கள்:-**

இதில் காணப்படும் செய்யுள்கள் அந்தந்த கதாபாத்திரத்தின் மொழி திறன் எவ்வாறு இருக்குமோ அல்லது அக்கதாபாத்திரம் ஒருவருடன் உரையாகும் போது அவர்களுக்கோ போல் கூறுவது போல திறம்படி கூறப்பட்டுள்ளது. எ.டு. சிலவற்றை காண்போம்.

**இடம்: திரிகூட நாதர் பவணி.**

**தகுட ராகம்: பந்துவரளி**

**தாளம்: காப்பு**

**பல்லவி**

பவனி வந்தணரே மழவிடை பவனிவந்தனரே

**அனுபல்லவி**

அவனி போற்றிய குறும் பலா உரை
பவுன நாயகர் எவன நாயகர்
சிவனுமாய் அறி அயனு மானவர்
கவன மால் விடை அதனிலேயே

**சரணம்**

அண்டர் கூட்டமும் முனிவர் கூட்டமும்
அசுரர் கூட்டமும் மனிதர்ராகிய
தொண்டர் கூட்டமும் இமைபிலாரெனச்
கழ்ந்து தனிதனி மயங்கவே
பண்டை நரர் இவர் தேவர் இவரெனப்
பகுத்து நிருவிய வேளை தொகுத் தொறும்
மன்ட லிகரை நந்தி பிரம்படி
மகுட கோடியிர் புடைக்கவே...

தொடர்ந்து மேலும் 7 கண்டிகள் உள்ளன._4

**முடிவுரை:**

மேலே குறிப்பிடப்பற்றவற்றில் அழகர் குறவஞ்சி, விராலிமலைக் குறவஞ்சி மற்றும் சரபேந்திர பூபா பூபாலக் குறவஞ்சி 18ம் நூற்றாண்டை சார்ந்தவை.

சோழன் குறவஞ்சியை அடுத்து கிடைக்கப் பெற்றது. சுகசி குறவஞ்சி முத்துக் கவி பாடிய சுகசி குறவஞ்சியின் காலம் கி.பி. 1684- 1712 எனவே 17ம் நூற்றாண்டுப் படைப்பாகும்.
தியாகேசர் குறவஞ்சியும் சகசி மன்னர் காலத்துப் படைப்பாகும். தியாகேசர் குறவஞ்சியின் பாட்டுடைத் தலைவன் திருவாரூரில் கோயில் கொண்டுள்ள நியாகப் பெருமான் ஆவார்.

தியாகேசர் குறவஞ்சி நெய்வக் குறவஞ்சியானதால், நாரதர் குறத்தியாக வருகிறார். தும்புரு குறவனாக வருகிறார்.

குற்றாலக் குறவஞ்சியின் காலம் 1640 கி.பி. 1715 என்று அறியலாம். திருக்குற்றாலக் குறவஞ்சியைப் பாடிய கவிஞர் திரிகூடராசப்ப கவிராயர் ஆவார். முத்துவிசய ரெங்க சொக்கநாத நாயக்கர், திரிகூடராசப்பருக்கு "குறவஞ்சிமேடு" நிலம் முற்றூட்டாக அளித்ததாகக் குறவஞ்சியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**அடிகுறிப்புகள் :**

1. குற்றால குறவஞ்சி
2. CARNATIC MUSIC COMPOSERS,Dr. B. Dhayanantha Rao
3. மோகினி விலாச குறவஞ்சி
4. தமிழ் நாட்டிய மரபில் பரதநாட்டியம்